பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை

15 06 2024 7 15

சனிக்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. எரிசக்திக்கான மாற்று திட்டங்களை கொண்டு வருவது குறித்த இந்தியாவின் முயற்சிகள் தொடர்பாக ஜி-ஏழு உச்சிமாநாட்டில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

2. பிரதமரின் விவசாயிகள் வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ் 17-வது தவணை இம்மாதம் 18-ஆம் தேதி விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட உள்ளதாக வேளாண்துறை அமைச்சர் திரு சிவராஜ்சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

3. மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் உற்பத்தியை சுயசார்பு இந்தியா இயக்கத்தின் கீழ் மேற்கொள்வது குறிதது மத்திய அமைச்சர் திரு ஜெ பி நட்டா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

4. சத்திஷ்கர் மாநிலம் பஸ்தார் வனப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் எட்டு மாவோயிஸ்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

5. உலகக்கோப்பை டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா - கனடாவை எதிர்கொள்கிறது.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

**[]<<<>>>[]**

இந்தியாவின் ஆக்கப்பூர்வமான கருத்துக்களை உலக அரங்கில் முன் நிறுத்துவதற்கு ஜி-ஏழு உச்சி மாநாடு ஒரு முக்கிய வாய்ப்பாக அமைந்தது என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

இத்தாலியில் அரசு முறைப்பயணத்தை முடித்துக்கொண்டு இன்று புதுதில்லி திரும்பிய பிரதமர், வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், எதிர்கால சந்ததியினருக்கு வளமான உலகை உருவாக்கித்தர வேண்டும் என்ற அறைகூவலை இந்தியா உலகத் தலைவர்களிடம் முன் வைத்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் ஜி-ஏழு உச்சிமாநாட்டையொட்டி தலைவர்களிடம் உலகளாவிய முக்கிய பிரச்சினைகள் குறித்தும், சமூக பொருளாதார உறவுகளை இந்தியா மேம்படுத்துவதற்கான திட்டங்கள் குறித்தும் ஆலோசித்ததாக அவர் கூறியுள்ளார்.

இத்தாலி பிரதமர் திருமதி ஜியார்ஜியா மெலோனி, பிரிட்டன் பிரதமர் திரு ரிஷி சுனக், பிரான்ஸ் அதிபர் திரு இமானுவேல் மேக்ரோன், உக்ரைன் அதிபர் திரு விளாடிமிர் ஜெலான்ஸ்கி ஆகியோருடன் தாம் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்தியதையும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவின் எரிசக்திக்கான மாற்று திட்டங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாகவும், எரிசக்தி மாற்றத்திற்கான செயலாக்கம் குறித்தும் விவாதிக்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

குறைந்த செலவில் அனைவருக்கும் கிடைக்கக்கூடிய வகையிலும், சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையிலும் எரிசக்தி மாற்றம் கொண்டுவரப்பட வேண்டியதன் அவசியத்தையும் இந்தியா வலியுறுத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் குறித்து இந்தியாவின் கருத்துக்களை பகிர்ந்து கொண்டதாகக் குறிப்பிட்டுள்ள பிரதமர், அனைவருக்கும் பயன்படும் வகையில் ஆக்கப்பூர்வமாக இதனை பயன்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

சர்வதேச ஒத்துழைப்போடு இந்த தொழில்நுட்பத்தை விரைந்து கொண்டுவர இந்தியா ஆர்வம் கொண்டுள்ளதாகவும் தெரிவித்ததாக திரு நரேந்திரமோடி சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

பிரதமரின் விவசாயிகள் வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ் 17-வது தவணையாக 20 ஆயிரம் கோடி ரூபாயை வரும் 18-ஆம் தேதி வாரணாசியியில் நடைபெறும் நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திரமோடி விடுவிக்க உள்ளதாக மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவராஜ்சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒன்பது கோடியே மூன்று லட்சம் விவசாயிகளின் வங்கி கணக்குகளில் இந்த தொகை நேரடியாக செலுத்தப்பட உள்ளதாகக் கூறினார்.

கடந்த பத்து ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் மூன்று லட்சம் கோடி ரூபாய் 11 கோடி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு அனைத்து முதலமைச்சர்களுக்கும் தாம் கடிதம் எழுதி இருப்பதாக திரு சௌஹான் கூறினார்.

**[]<<<>>>[]**

மத்திய ரசாயன மற்றும் உரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா, நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் திரு கிஷன்ரெட்டி ஆகியோர் தங்களது துறையின் செயல்பாடுகள் குறித்தும், தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசில் 100 நாள் செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்தும் அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டனர்.

மத்திய அமைச்சர் திரு ஜெ பி நட்டா, மற்றும் இணை அமைச்சர் திருமதி அனுப்பிரியா படேல் ஆகியோர் மருந்துகள் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் உற்பத்தியை சுயசார்பு இந்தியா இயக்கத்தின் கீழ் மேற்கொள்வது, மக்கள் மருந்தகங்களை விரிவுபடுத்துவது, மருந்துகள் மற்றும் மருத்துவ சிகிச்சைகள் குறைந்த விலையில் மக்களுக்கு கிடைக்கச் செய்வது உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து இந்த ஆய்வுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

மத்திய அரசின் 100 நாள் செயல் திட்டங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் உற்பத்தியை தரம் உயர்த்த வேண்டுமென்று திரு நட்டா கேட்டுக் கொண்டார்.

அடுத்த மூன்று ஆண்டுகளில் உலகத்தரத்திலான மருத்துவ சேவை அனைவருக்கும் கிடைக்கப்பெற வேண்டுமென்று அமைச்சர் வலியுறுத்தினார்.

நிலக்கரி மற்றும் சுரங்கங்கள் துறை அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்ட மத்திய அமைச்சர் திரு கிஷன்ரெட்டி, இணை அமைச்சர் திரு சதிஷ் சந்திர துபே ஆகியோர் நிலக்கரி உற்பத்தித் துறையை மேம்படுத்துவது குறித்தும், நில குத்தகைக் கொள்கை குறித்தும் விவாதித்தனர்.

நிலக்கரிக்கான வர்த்தக கட்டமைப்பை உருவாக்குவது குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

[]<<<>>>[]

நாடாளுமன்ற நடவடிக்கைகள் சுமூகமாக நடைபெற அனைத்துக் கட்சிகளுடன் இணைந்து பணியாற்றுவதை அரசு ஆர்வத்துடன் எதிர்நோக்கி இருப்பதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், நாடாளுமன்றத்தின் மாண்பினை காக்கும் வகையில் புதிய உறுப்பினர்கள் செயல்படுவார்கள் என்று தாம் நம்புவதாக அவர் கூறியுள்ளார்.

18-வது மக்களவையின் முதல் கூட்டத்தொடர் வரும் 24-ஆம் தேதி தொடங்க உள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

[]<<<>>>[]

மூன்று புதிய குற்றவியல் நடைமுறைச் சட்டங்களின் சிறப்பியல்புகளை மக்களுக்குத் தெரிவிக்கும் நோக்கில் மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகம் நாளை கொல்கத்தாவில் கருத்தரங்கம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

இந்தியாவில் குற்றவியல் நீதித்துறை கட்டமைப்புக்கான வளர்ச்சிப்பாதை என்ற தலைப்பில் நடைபெறும் இந்த கருத்தரங்கில், இந்த குற்றவியல் சட்டங்களின் நடைமுறை மற்றும் பல்வேறு தரப்பினரின் கருத்துக்களும் விரிவாக விவாதிக்கப்பட உள்ளன.

கடந்த டிசம்பர் மாதம் குடியரசுத் தலைவரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட புதிய குற்றவியல் நடைமுறைச் சட்டங்கள் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி அமலுக்கு வருவது குறிப்பிடத்தக்கது.

[]<<<>>>[]

சாகித்ய அகாடமியின் பால் சாகித்ய புரஸ்கார் மற்றும் யுவ புரஸ்கார் விருதுகள் இன்று அறிவிக்கப்பட்டுள்ளன.

பால சாகித்ய புரஸ்கார் விருதை 24 எழுத்தாளர்களும், யுவ புரஸ்கார் விருதுகளும் 23 பேரும் பெறுகின்றனர். தமிழில் திரு யூமா வாசுகி எழுதிய 'தன்வியின் பிறந்தநாள்' நூலுக்கு பால சாகித்ய புரஸ்கார் விருது கிடைத்துள்ளது.

திரு லோகேஷ் ரகுராமனின் 'விஷ்ணு வந்தார்' என்ற சிறுகதை தொகுப்பு யுவ புரஸ்கார் விருதுக்கு தேர்வாகியுள்ளது.

விருது பெற்றுள்ளவர்களுக்கு தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி, முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்த மதிப்புமிக்க விருதுகள் தமிழ் இலக்கியத்துக்கு அவர்கள் ஆற்றிய சிறப்பான பங்களிப்புகளுக்கு சான்றாகவும், இலக்கிய பாரம்பரியத்தை வளப்படுத்துவதாகவும் உள்ளது என்று ஆளுநர் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

சிறார் மற்றும் இலக்கிய படைப்பாளிகளான இவர்களின் பங்களிப்பு பாராட்டுக்குரியது என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

அருணாச்சல பிரதேசத்தில் புதிதாக பொறுப்பேற்றுள்ள முதலமைச்சர் திரு பெமா கண்டு தலைமையிலான அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளவர்களுக்கான இலாக்கா பொறுப்புகள் இன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

12 பேர் கொண்ட இந்த புதிய அமைச்சரவையில் ஒன்பது புது முகங்கள் இடம்பெற்றுள்ளனர்.

துணை முதலமைச்சர் திரு சௌனா **Mein** –னுக்கு நிதி, மின்சாரம் மற்றும் திட்டமிடல் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

முன்னாள் பேரவைத் தலைவர் திரு **pasang Dorjee** -க்கு கல்வி மற்றும் ஊரகப் பணிகள் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

சத்திஷ்கர் மாநிலம் பஸ்தார் வனப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் எட்டு மாவோயிஸ்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்தோ – திபெத்திய எல்லைக் காவல்படையினர் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் உள்ளிட்ட கூட்டுப்படையினர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தபோது நடந்த துப்பாக்கி சண்டையில் இந்த மாவோயிஸ்டுகள் கொல்லப்பட்டதாகவும், பாதகாப்புப் படையினர் இரண்டு பேருக்கு காயம் ஏற்பட்டதாகவும் பாதுகாப்புப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

கூட்டுப்படையினர் தொடர்ந்து தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**[]<<<>>>[]**

நீலகிரி மலை ரயிலின் 125–வது ஆண்டுவிழா இன்று கொண்டாடப்பட்டது.

வரலாற்று சிறப்புமிக்க நீலகிரி மலை ரயிலுக்கு மக்களிடையே உற்சாக வரவேற்பு உள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

*( வாய்ஸ்பைட் - சரவணன் ) -42---- செகண்ட்*

**[]<<<>>>[]**

உலகக்கோப்பை டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா - கனடாவை எதிர்கொள்கிறது.

ஃபுளோரிடாவில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

ஆசிய ஜூனியர் துடுப்பு படகு சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

**End of News**